# நகல் மனு (COPY APPLICATION)

அனுப்புதல்:
*xxxx*

பெறுநர்:
உயர்திரு கிராம நிர்வாக அலுவலர் அவர்கள்,
கிராம நிர்வாக அலுவலகம்,
துளார், செந்துறை வட்டம்,
அரியலூர் மாவட்டம் - 621719.

பொருள்:

வருவாய் நிலை ஆணை (RSO) 15, வருவாய் நிலை ஆணை (RSO) 173, மாவட்ட அலுவலக நடைமுறை நூல் (DOM), மற்றும் பாரதிய சாட்சியச் சட்டம் 2023 பிரிவு 74, 75, 76 & 77-ன் ஆகிய நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுகள் 13(1), 14, 15, 16, 17, 18, 19(1)(அ), 20, 21 & 51A-ன் கீழ் கிராம நிர்வாக அலுவலரின் பணி மற்றும் இருப்பிடம் சார்ந்த நிபந்தனை நில ஆவணங்கள் மற்றும் பொது ஆவணங்கள் சான்றிட்ட நகல்கள் வழங்குவது தொடர்பாக.

பார்வை:

துளார் வருவாய் கிராம நிர்வாக அலுவலர் திரு.காமதேவன் அவர்களின் பணி மற்றும் இருப்பிடம் சார்ந்த ஆவணங்கள் பெறுவதற்கு,

மேலும் தங்கள் அலுவலகத்தில் வருவாய் நிலை ஆணை (RSO) எண்-173, தமிழ்நாடு அரசு (மாவட்ட) அலுவலக நடைமுறை நூல் (DOM) மற்றும் பாரதிய சாட்சியச் சட்டம் 2023 (BSA)-ன் பிரிவுகள் 74, 75, 76, 77 ஆகியவை நடைமுறையில் உள்ளது.

இதன் அடிப்படையில், வருவாய் நிலை ஆணை (RSO) எண்-15-ன் கீழ் வழங்கப்பட்ட நிபந்தனை நிலம் (Condition Land) தொடர்பான ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட உண்மை நகல்களை (Certified True Copies) வழங்கிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாவணங்கள் பொது ஆவணங்கள் என்பதால், பாரதிய சாட்சியச் சட்டம் 2023 பிரிவு 75-ன் படி இவற்றை ஆய்வு செய்யவும், RSO 173-ன் கீழ் உரிய சான்றிட்ட நகல்களைப் பெறவும் எனக்குச் சட்டப்பூர்வ உரிமை உண்டு

கோரப்படும் ஆவணங்களின் விவரம் :

1. தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் சிறப்புப் பணி விதிகள் (Rule 14) மற்றும் அரசாணை எண்: 141 (வருவாய்த்துறை, நாள்: 21.01.1981)-ன் படி, அரசுப் பொது ஊழியரான திரு.காமதேவன் அவர்கள், துளார் வருவாய் கிராம எல்லையினுள்ளேயே தங்கிப் பணியாற்ற வேண்டிய கட்டாய சட்ட விதி உள்ளதால், தாங்கள் துளார் வருவாய் கிராமத்தில் தற்போது தங்கியிருக்கும் வீட்டின் முழுமையான முகவரி விபரம் மற்றும் தங்களின் குடியிருப்பிடத்துடன் கூடிய GPS அமைவிடம் (GPSCoordinates) தெளிவுறத் தெரியும் வகையிலான செல்ஃபி (Selfie) புகைப்படத்தின் நகலினை, RSO 173(13), DOM மற்றும் BSA 2023 பிரிவு 74, 75, 76, 77-ன் கீழ் நகலினை சான்றளித்து தரக்கோருகிறேன்

2. துளார் வருவாய் கிராமத்தில் பணிபுரியும் கிராம நிர்வாக அலுவலரான தாங்கள் தற்போது வசித்து வரும் குடியிருப்பிடம் தங்களின் சொந்த வீடு எனில், அக்குடியிருப்பு துளார்

வருவாய் கிராம எல்லைக்குள்ளேயே குடியிருப்பில் இருக்க பிறப்பித்த உத்தரவு நகலினை உறுதிசெய்யும் வகையில், வீட்டின் முகவரி விவரங்கள் மற்றும் அக்குடியிருப்பு தொடர்பான அறிக்கைச் சான்றினை, RSO 173(13), DOM மற்றும் BSA 2023 பிரிவு 74, 75, 76, 77-ன் கீழ் நகலினை சான்றளித்து தரக்கோருகிறேன்

3. துளார் வருவாய் கிராமத்தில் தாங்கள் வசித்து வரும் குடியிருப்பிடம் வாடகை வீடு எனில், அரசு தங்களுக்கு வழங்கும் வீட்டு வாடகைப்படி (Headquarters Residency Details) சலுகையின் கீழ், அக்குடியிருப்பிற்குத் தாங்கள் செலுத்திய மாத வாடகை ரசீது (Rent Receipt) அல்லது வாடகை ஒப்பந்தப் பத்திரத்தின் (Rental Agreement) நகலினை, RSO 173(13), DOM மற்றும் BSA 2023 பிரிவு 74, 75, 76, 77-ன் கீழ் நகலினை சான்றளித்து தரக்கோருகிறேன்

4. துளார் வருவாய் கிராமத்தில் தாங்கள் வசித்து வரும் குடியிருப்பிடம் அரசால் ஒதுக்கப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் அரசு குடியிருப்பு எனில், அக்குடியிருப்பைத் தங்களுக்கு ஒதுக்கீடு செய்து மேலதிகாரிகளால் பிறப்பிக்கப்பட்ட அரசு ஒதுக்கீட்டு உத்தரவு நகல் (Allotment Order) மற்றும் அது தொடர்பான சொந்தப் பணமா அல்லது அரசுப் படியிலிருந்து பெறப்பட்டதா என்ற அறிக்கையினை, RSO 173(13), DOM மற்றும் BSA 2023 பிரிவு 74, 75, 76, 77-ன் கீழ் நகலினை சான்றளித்து தரக்கோருகிறேன்.

5. மேற்கண்ட ஆவணப் பதிவேடு முழுக்கோப்புப் பதிவேடுகள் தாங்கள் பராமரிக்கும் அலுவலகத்தில் உடைந்து, சிதைந்து அல்லது அழிக்கப்பட்டிருந்தால், அவை குறித்துப் பராமரிக்கப்படும் அழித்தல் பதிவேட்டின் (Destruction Register) நகலையும், அது தொடர்பான விரிவான அறிக்கையினையும் RSO 173(13), DOM மற்றும் BSA 2023 பிரிவு 74, 75, 76, 77-ன் கீழ் நகலினை சான்றளித்து தரக்கோருகிறேன்.

6. மேற்கண்ட ஆவணப் பதிவேடு முழுக்கோப்பு ஆவணங்கள் பதிவேடுகள் சேதமடைந்து அல்லது சிதைந்து பராமரிக்க முடியாத நிலையில் இருந்தால், அவற்றைப் பெற மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த சீரமைப்பு நகல் Arrangements Copy), நேர்த்தி நகல் (Fair Copy) பதிவேடு, அல்லது ஆவணங்களை அழிப்பதற்காகப் பராமரிக்கப்படும் புத்தகங்கள், கணக்குகள் மற்றும் பட்டியல்கள் அடங்கிய ஆவணக் கோப்புகளின் சான்றளிக்கப்பட்ட நகல்களை RSO 173(13), DOM மற்றும் BSA 2023 பிரிவு 74, 75, 76, 77-ன் கீழ் நகலினை சான்றளித்து தரக்கோருகிறேன்

7. மேற்கண்ட ஆவணங்களின் முழுக்கோப்புப் ஆவணங்கள் பதிவேடுகள் தங்கள் அலுவலகத்தில் காணாமல் போயிருந்தால், அது குறித்துத் தங்களுக்கு முன் பணிபுரிந்த ஊழியர்களோ அல்லது தங்களின் பணிக்காலத்திலோ ஆய்வுக் குழு அதிகாரியாலோ (Inspection Officer) தங்களாலோ உயரதிகாரிகளுக்கு எழுத்துப்பூர்வமாகவோ வாய்மொழியாகவோ தகவல் அளிக்கப்பட்ட விவரங்கள், மற்றும் ஆவணங்கள் காணாமல் போனது தொடர்பாக எல்லைக்குட்பட்ட காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகார் மனுவின் ரசீது (CSR) மற்றும் முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யப்பட்டிருப்பின் அதன் விவரங்கள் அடங்கிய அறிக்கையின் சான்றளிக்கப்பட்ட நகலினை RSO 173(13),

DOM மற்றும் BSA 2023 பிரிவு 74, 75, 76, 77-ன் கீழ் நகலினை சான்றளித்து தரக்கோருகிறேன்.

8. நான் மேலே கோரியுள்ள ஆவணங்களின் நகல்கள் மற்றும் அறிக்கைகள் அனைத்தும் தங்களுடைய அலுவலகப் பராமரிப்பில் உள்ள பொது ஆவணங்கள் (Public Documents) தொடர்பானது மட்டுமே தவிர, இவை எந்தவொரு மூன்றாம் நபரின் (Third Party) தனிப்பட்டத் தகவல்களோ அல்லது அறிக்கைகளோ அல்லது அந்தரங்கமோ, அல்லது ராணுவரகசியமோ அல்ல என்பதைத் தங்களுக்குத் தெளிவுபடுத்தியுள்ளேன், எனவே, இதில் மூன்றாம் நபர் தகவல் சார்ந்த எந்தவிதத் தடையும் இல்லை, கோரப்பட்ட சான்றளிக்கப்பட்ட நகல்களை RSO 173(13), DOM மற்றும் BSA 2023 பிரிவு 74, 75, 76, 77-ன் கீழ் நகலினை சான்றளித்து தரக்கோருகிறேன்

9. நான் கோரியுள்ள தகவல்கள், அறிக்கைகள் மற்றும் நகல் பதிவுத் தரவுகள் அனைத்தும் "இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 1950"-ன் உறுப்பு (Article) 14 மற்றும் 21-ன் கீழ் எனக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை உரிமைகளாகும். இச்சட்டக் கோட்பாடுகள் தங்களையோ அல்லது தங்களது அரசு அலுவலகத்தையோ கட்டுப்படுத்தாது / பொருந்தாது எனில், அதற்கான சட்டப்பூர்வக் காரணங்கள், அரசாணைகள் மற்றும் ஆதாரங்களின் சான்றளித்து தரக்கோருகிறேன்

10. தங்கள் அலுவலகத்தில் பராமரித்துவரும் மேற்கண்ட அனைத்தும் அரசுப் பொது ஆவணங்கள் என்பதால், தங்களுடைய அலுவலகத்தில் நடைமுறையிலுள்ள வருவாய் நிலை ஆணை எண் -173 மற்றும் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் (DOM)-ன் சட்ட நடைமுறைகள் தங்களுடைய அரசுத் துறை அலுவலகத்தில் நடைமுறையில் உள்ளது. எனவே சான்றிட்ட உண்மை நகல்களை (Certified Copies) RSO 173(13), DOM மற்றும் BSA 2023 பிரிவு 74, 75, 76, 77-ன் கீழ் நகலினை சான்றளித்து தரக்கோருகிறேன்

11. RSO 173(13), DOM மற்றும் BSA 2023 பிரிவு 74, 75, 76, 77-ன் கீழ், அரசுப் பொது ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களை (Certified Copies) வழங்கத் தகுதியானவர், இச்சட்டமானது தங்களைக் கட்டுப்படுத்தாது அல்லது எனக்குப் பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை எனில் அதற்கான சட்டப்பூர்வக் காரணமும், விலக்களிக்கும் அரசாணைகள் மற்றும் ஆதாரங்களின் நகல்கள் அடங்கிய அறிக்கையினை சான்றளித்து தரக்கோருகிறேன்

12. மேற்படி ஆவணக் கோப்புகளின் சான்றிடப்பட்ட உண்மை நகல்களை (Certified True Copies) வருவாய் நிலை ஆணை (RSO) எண்-173 மற்றும் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் (DOM)-ன் கீழ் பெறுவதற்கு, G.O. Ms. No. 7540, Commercial Taxes and Religious Endowments (CT & RE) Department, dated 29.01.1996-ன் படி நான் செலுத்த வேண்டிய கட்டண விவரங்கள் மற்றும் அதற்கான செலுத்துச் சீட்டு (E-Challan / Head of Account) விவரங்களை எனக்குத் தரக்கோருகிறேன்.

13. அரசு மற்றும் அரசு சார்ந்த அலுவலகங்களில் பராமரிக்கப்படும் ஆவணங்கள் அனைத்தும் பாரதிய சாட்சியச் சட்டம் 2023, பிரிவு 74-ன் கீழ் "பொது ஆவணங்கள்" (Public

Documents) ஆகும் என்பதால், மேற்படி பொது ஆவணங்களை பாரதிய சாட்சியச் சட்டம் 2023, பிரிவு 75 மற்றும் 76-ன் கீழ் எவரொருவரும் பார்வையிடவும், உரிய கட்டணத்தைச் செலுத்தி அவற்றின் சான்றளிக்கப்பட்ட உண்மை நகல்களைப் (Certified Copies) பெறவும் முழுச் சட்டப்பூர்வ கட்டாய உரிமை உண்டு. சட்டநடைமுறைகளுக்கு இணங்க சான்றளித்து தரக்கோருகிறேன்

14. இந்திய அரசியல் சாசனம் 1950" : 14, 15, 16, 17, 18, 19(1)(அ), 20, 21 & 51(A) (ஒ)-ன் கீழ் & பாரதிய சாட்சியச் சட்டம் 2023 ", பிரிவு-74-ன் கீழ் பொது ஆவணங்களை. பிரிவு 76-ன் கீழ் ஒவ்வொரு இந்திய குடிமகனும் ஆவணங்களை பார்வையிட்டு நகல் பெறலாம் என்று உள்ளது.

15. நாட்டில் அமுலில் உள்ள சட்டங்களில் ஒன்றான "பாரதிய சாட்சியச் சட்டம் -2023" @ "இந்திய சாட்சிய சட்டம் 1872" ஆனது. தங்களுடைய அலுவலகத்தில் அமுலில் உள்ளது,

16. மேற்படி பதில்கள் & ஆவணங்கள் அனைத்தும், மேற்படி தொடர்புடைய வழக்குகளில், சமர்ப்பிக்க வேண்டி அவசியமாக தேவைப்படுகிறது. ஆகவே, அதன் பொருள் உணர்ந்து, மேற்படி விண்ணப்பத்திற்குரிய பதில்கள் & ஆவணங்களை, மனுதாரர் ஆகிய எனக்கு அளித்திடுமாறு கோருகிறேன்.

17. மேற்கண்ட ஆவணங்களுக்குரிய எனது நகல் மனு கட்டணமாக நீதிமன்ற முத்திரை வில்லை (Court Stamp / E-challan மூலமாக ரூ.5/-(ஐந்து) ஒட்டியுள்ளேன். மேலும் எத்தனை நகல்கள் உள்ளன, மீதமுள்ள கட்டணம் எவ்வளவு மற்றும் எவ்வகையில் செலுத்துவது என்பது குறித்து எழுத்துபூர்வ பதிலறிகையின் மூலம் தெரிவித்தால், நகலுக்கான கட்டணத்தினை செலுத்திவிட தயாராக உள்ளேன். என்பதையும், மேற்கண்ட ஆவணங்களின் நகல் எனது தரப்பு ஆவணங்களாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இருப்பதால் தங்களின் மேலான பார்வைக்கு எனக்கு சான்றிட்டு நகல் வழங்க கோருகிறேன்.

(குறிப்பு)

வ.நி.ஆ-173 (3): கோரிய ஆவணம் கிடைக்கப்பெறவில்லை எனில் சான்றாக வழங்க வேண்டும்.

வ.நி.ஆ-173 (13): உண்மையான நகல் என்று சான்றிட்டு வழங்க வேண்டும்.

வ.நி.ஆ-173 (18): வழங்கப்படும் நகல் சரியாகவும், தெளிவாகவும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

வ.நி.ஆ-173 (24): விண்ணப்பம் நகல் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

இணைப்பு:

1. Court Stamp / E-Challan மூலம் (ரூ.5/- ஒட்டியுள்ளேன்).

இடம் : xxxxxxxxxx சுயசட்டபோராளி கையொப்பம்

நாள் : xxxxxxx